**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8044385

1. District மாவட்டம்: பெரம்பலூர் மாவட்டம். PS காவல்நிலையம்: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு Year ஆண்டு: 2021 FIR No. மு.த.அ. எண்: 08 Date நாள்: 30.10.2021

2. (i) Act சட்டம்: The prevention of Sections பிரிவுகள்: 7, 7A
   (ii) Act சட்டம்: corruption Act - 1988 Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: (As amended in 2018) Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from நாள் முதல்: 29.10.2021 Date to நாள் வரை: 30.10.2021
   Time Period : நேர அளவு — Time from நேரம் முதல்: 16.30 hrs Time to நேரம் வரை: 00.45 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 30.10.2021 Time நேரம்: 13.30 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time நேரம்:

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக: தட்டச்சு தரப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்: சுமார் 18 km வடமேற்கு
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி: ஊராட்சி ஒன்றியம், வேப்பந்தட்டை பெரம்பலூர் மாவட்டம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: K.P. நேதாஜி (b) Father's/ Husband's Name : தந்தை / ~~கணவர்~~ பெயர்: பெரியசாமி.
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு: 57 / 2021 (d) Nationality : நாட்டினம்: இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில்: ஆய்வுக்குழு ஆய்வாளர் (g) Address : முகவரி: மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் அலுவலகம், திருச்சிராப்பள்ளி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   இத்துடன் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   தாமதமில்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறது.
இன்று 30.10.2021-ம் தேதி 13.30 மணிக்கு, பெரம்பலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர், R.ரத்தினவல்லி ஆகிய நான் அலுவலில் இருந்தபோது திரு. K.P. ராஜேந்திரன், வயது 57/2021 S/o பெரியசாமி, ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் அலுவலகம், திருச்சிராப்பள்ளி அவர்கள் நேரில் ஆஜராகிக் கொடுத்த தட்டச்சு செய்யப்பட்டிருந்த புகாரின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர்

— contd —

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

K.P. [signature]
Cell Inspector 30/10/2021

R. Rathinavalli.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
30/10/2021

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
30.10.2021.

Name: பெயர் R. ரத்தினவல்லி
Rank: நிலை ..................No. எண் ..........
காவல் ஆய்வாளர்,
ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
பெரம்பலூர்.

பெரம்பலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.08/2021 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி.

***

K.P.ரவிக்குமார், வயது 57/2021, த/பெ பெரியசாமி, ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் அலுவலகம், திருச்சிராப்பள்ளி. பெறுநர்,காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, பெரம்பலூர். அம்மா, பொருள்: திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது - கைப்பற்றபட்ட பணம் மற்றும் ஆவணங்களை ஒப்படைத்தது - சம்மந்தப்பட்ட நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோருதல் - தொடர்பாக. 29.10.2021-ம் தேதி நான் அலுவலகத்தில் அலுவலில் இருந்தபோது, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (பொறுப்பு) அவர்கள் உத்தரவின்பேரில் பெரம்பலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு மதியம் சுமார் 12.00 மணியளவில் சென்று காவல் ஆய்வாளர் திருமதி.ரத்தினவள்ளி அவர்களை சந்தித்தபோது அவர் வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் உள்ள ஒரு பிரிவான ஒன்றிய பொறியாளர் பிரிவில் பணிபுரியும் பொறியாளர் மற்றும் பணியாளர்கள் வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றியத்தில் மேற்கொள்ளப்படும் பணிகள் தொடர்பாக வரும் ஒப்பந்தாரர்களிடமும், பஞ்சாயத்து செயலர் மற்றும் இதர பொதுமக்கள் ஆகியோரிடமும் தாங்கள் செய்யும் வேலைகளுக்காக கையூட்டு கேட்டு பெறுவதாகவும், அன்று மாலை மேற்படி காண்டிராக்டர்களிடம் கையூட்டாக பணம் உதவி பொறியாளர் பெறவிருப்பதாகவும், ரகசிய தகவல் கிடைத்துள்ளதாகவும் அதனால் மேற்படி அலுவலகத்தை திடீர் தணிக்கை செய்ய கேட்டுக்கொண்டதன்பேரில் நானும் ஊழல் தடுப்பு மற்றம் கண்காணிப்புப் பிரிவு குழுவினருடன் அரசு வாகனத்தில் புறப்பட்டு அலுவலகத்திலிருந்து சுமார் 18கி.மீ வடமேற்கிலுள்ள வேப்பந்தட்டை வந்து வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு வெளியிலிருந்து கண்காணித்துவிட்டு மேற்படி அலுவலகத்தினை சோதனை செய்ய மாலை சுமார் 16.30 மணியளவில் அலுவலகத்திற்குள் நுழைந்தோம். பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகமானது பெரம்பலூர் சேலம் மெயின்ரோட்டிற்கு கிழக்கில் முதல் தளத்துடன் கூடிய அரசு கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இவ்வலுவலகத்திற்கு தெற்கில் வட்டார வள மையமும், வடக்கில் ஊராட்சி

ஒன்றிய பழைய அலுவலகமும் உள்ளது. அலுவலகத்தில் நுழைவு வாயிலின் மேற்கில் போர்டிகோ உள்ளது. நுழைவு வாயிலின் கிழக்கில் தரைத்தளத்தில் வடக்கில் வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) அறையும், அதற்கு கிழக்கில் உள்ள பணியாளர்களது அறையில் தெற்கில் இருந்து வடக்காக முறையே துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (நிர்வாகம்), பண்டக அறை, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (சத்துணவு) அறைகள் உள்ளது. அதற்கு கிழக்கில் மேற்கிலிருந்து கிழக்காக முறையே அ1, அ2, அ3, அ4 இருக்கைகள் உள்ளது. அதற்கும் கிழக்கில் வடக்கிலிருந்து தெற்காக முறையே விரிவாக்க அலுவலர் சமூக நலம், காலி அறை, தேர்தல் படிவங்கள் அறை உள்ளது. அதற்கும் மேற்கில் கிழக்கிலிருந்து மேற்காக முறையே அ6, அ5, கணக்கர் இருக்கை உள்ளது. மேற்படி அறையில் இருந்த 11-நபர்களை சோதனை செய்த போது அவர்கள் வைத்திருந்த பணத்திற்கு தகுந்த முகாந்திரம் கூறியதால் அவர்களிடமிருந்து பணம் ஏதும் கைப்பற்றபடவில்லை. மேற்படி பணியாளர்களது அறைக்கு தெற்கில் பதிவறையும் கணினி அறையும் உள்ளது. அதற்கும் தெற்கில் மீட்டிங் ஹாலும், சேர்மன் அறையும் உள்ளது. முதல் தளத்தில் வடக்கில் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) அறை, அதற்கும் கிழக்கில் திட்ட பணியாளர்கள் அறையில் தெற்கிலிருந்து வடக்காக முறையே துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஊராட்சிகள் அறை, பூட்டிய அறை, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (MGNREGS) அறையும், அதற்கு கிழக்கில் மேற்கிலிருந்து கிழக்காக முறையே ஆ2 இளநிலை உதவியாளர், உதவியாளர் இருக்கைகளும் அதற்கு கிழக்கில் வடக்கிலிருந்து தெற்காக முறையே தனித்தனியே மூன்று மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அறைகளும் உள்ளது. தெற்கில் கூட்ட அரங்கம் உள்ளது. கூட்ட அரங்கிற்கு கிழக்கில் கழிவறைகள் உள்ளது. கூட்ட அரங்கிற்கு மேற்கில் கம்பியூட்டர் அறையும் அதற்கும் தெற்கில் மற்றொரு கம்பியூட்டர் அறையும் அதற்கும் கிழக்கில் ஒன்றிய பொறியாளர் பிரிவு அலுவலகம் உள்ளது. ஒன்றிய பிரிவு பொறியாளர் அலுவலகத்தில் நுழைந்தவுடன் தெற்கில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (தணிக்கை) இருக்கையும், அதற்கும் வடக்கில் தெற்கிலிருந்து வடக்காக முறையே ஒன்றிய பணி மேற்பார்வையாளர் அறையும், பூட்டிய அறை இளநிலை பொறியாளர் அறை, காலி அறை, கழிவறை, பொறியாளர் அறைகள் உள்ளது. முதல் தளத்தினை சோதனை செய்யும் பொருட்டு வந்து பார்த்தபோது

வடக்கிலிருந்த முதல் அறையில் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) திருமதி.லட்சுமி த/பெ நடராஜன் இருக்கையில் அமர்ந்திருந்தார். அவரிடம் என்னையும் விஜிலென்ஸ் இன்ஸ்பெக்டர் மற்றும் விஜிலென்ஸ் குழுவினரை அறிமுகம் செய்து கொண்டு அலுவலகத்தை சோதனை செய்ய வந்திருக்கும் நோக்கத்தை தெரிவித்து சோதனை செய்தேன். வட்டார வளர்ச்சி அலுவலர் லட்சுமி அவர்கள் ரூ.400/- மட்டும் தனது கைப்பையில் வைத்திருந்தார். விசாரிக்க பஸ் செலவிற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார். அந்த பணம் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவரது அறைக்கு கிழக்கிலிருந்த திட்ட பணியாளர்கள் அறையிலிருந்த 9-நபர்களை சோதனை செய்து விசாரிக்க அவர்களிலில் பாக்கியலட்சுமி க/பெ ஆறுமுகம், செயலர், வி.களத்தூர் பஞ்சாயத்து, வேப்பந்தட்டை தாலுக்கா, பெரம்பலூர் என்பவர் ரூ.6000/-ம் வைத்திருந்தார். விசாரிக்க அவர் முன்னுக்குபின் முரணாகவும் பின் 29.10.2021-அன்று பஞ்சாயத்திற்குட்பட்ட பொதுமக்களிடமிருந்து வசூல் செய்த வீட்டு வரி ரசீதிற்கான பணம் என்றும் தெரிவித்தார். அதற்கான பதிவேடு வி.களத்தூர் பஞ்சாயத்து தலைவர் திரு.பிரபு அவர்களிடம் இருப்பதாகவும் அதனை தான் கொண்டுவரச் சொல்லி அவரிடம் தனது செல்போன் மூலம் பேசி கேட்டுக்கொள்ளவதாகவும் தெரிவித்து பேசினார். நீண்ட நேரம் ஆகியும் மேற்படி தலைவர் பிரபு வராததால் அவரை விஜிலென்ஸ் இன்ஸ்பெக்டரும் தொடர்பு கொண்டபோது தான் வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு அருகில் வந்து விட்டதாகவும் விபரம் நேரில் தெரிவிப்பதாகவும் சொன்னதாக இன்ஸ்பெக்டர் என்னிடம் தெரிவித்தார். பின்னர் நேரில் வந்த மேற்படி தலைவர் பிரபு அவர்கள் செயல்முறைகள் தயார் செய்து கொண்டிருந்த கணினி அறை நுழைவு வாயில் நின்று கொண்டு யார் என்னை அழைத்தது என்று கேட்டதற்கு விஜிலென்ஸ் இன்ஸ்பெக்டர் அவர்கள் தன்னை பெரம்பலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு ஆய்வாளர் என்றும் மேற்படி அலுவலகத்தை ஆய்வுக்குழு ஆய்வாளர் தங்களுடன் சேர்ந்து சோதனை செய்யும் போது வி.களத்தூர் பஞ்சாயத்து செயலர் திருமதி.பாக்கியலட்சுமி அவர்கள் வைத்திருந்த பணம் ரூ.6000/- குறித்து விபரம் கேட்டதற்கு முன்னுக்கு பின் முரணாக அவர் பதில் அளித்ததாகவும் அது சம்மந்தமாக பஞ்சாயத்து தலைவர் பிரபுவிற்கு விபரம் தெரியும் என்று தெரிவித்ததாலும் அதனை உறுதிபடுத்தி

கொள்வதற்காக தான் போனில் விபரம் கேட்டதாகவும் தெரிவித்தார். அதற்கு பிரபு அவர்கள் Who ever you may be நீங்கள் நினைத்த நேரம் எல்லாம் ரெக்கார்ட் கேப்பீங்களா எங்க மேல் என்ன கேஸ் வேணும்னாலும் போட்டுக்கங்க என்று சொன்னவரை அவரை நான் ஆசுவாசப்படுத்தவிட்டு பாக்கியலட்சுமி வைத்திருந்த பணம்ரூ.6000/-ற்கு சரியான ஆவணங்கள் காட்டாததால் அவர் வைத்திருந்த மேற்படி பணத்தை மட்டும் மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றினேன். மற்றவர்கள் வைத்திருந்த பணம் ஏதும் கைப்பற்றபடவில்லை. இரு கம்பியூட்டர் அறையில் இருந்த 7-நபர்களை சோதனை செய்த போது அவர்களிடமிருந்த பணத்திற்கு சரியான காரணம் கூறியதால் அவர்களிடமே பணம் திருப்பி கொடுக்கப்பட்டது. ஏதும் கைப்பற்றபடவில்லை. ஒன்றிய பொறியாளர் பிரிவு அறையினை சோதனை செய்த போது பொறியாளர் அறையில் இருந்த நபர்களிலில் 1) மணிகண்டன் த/பெ பஞ்சாட்சரம்,4/207 மாருதிநகர், வெண்பாவூர், வேப்பந்தட்டை 2) விஜயகுமார் த/பெ பெரியசாமி, 1/101 நடுத்தெரு, வெண்பாவூர், வேப்பந்தட்டை 3) பாலுசாமி த/பெ கந்தசாமி 2/37D அம்பேத்கர் தெரு, தொண்டபாடி, வேப்பந்தட்டை மற்றும் மேற்படி அறைக்கு சோதனையின்போது வந்த உதவி பொறியாளர் 4) திரு.ஆனந்தன் த/பெ அய்யாகண்ணு, உதவி பொறியாளர், ஒன்றிய பொறியாளர் பிரிவு, ஊராட்சிஒன்றியம், வேப்பந்தட்டை ஆகியோர் சரியான முகாந்திரம் கூறாமல் வைத்திருந்த பணம் முறையே ரூ.15000/-, 2000/-, 6500/-, 16000/- களை கையூட்டாக பெற்ற பணமாக, அல்லது கையூட்டு கொடுப்பதற்காக வைத்திருந்த பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின்பேரில் அவைகளை மேல் நடவடிக்கைகாக கைப்பற்றினேன். மேலும் மேற்படி அலுவலக முதல் தள வராண்டாவில் நின்று கொண்டிருந்த பொன்னுசாமி த/பெ நல்லதம்பி, நெய்குப்பை, வேப்பந்தட்டை என்பவர் ஆற்று மணல் எடுக்க அனுமதி பெறுவது சம்மந்தமாக அலுவலகத்திற்கு வந்ததாக தெரிவித்து சரியாக முகாந்திரம் கூறாமல் வைத்திருந்த பணம் ரூ.6,850/-யை மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றினேன். மேலும் மேற்படி அலுவலக பதிவேடுகளான ஊராட்சி ஒன்றியம் வேப்பந்தட்டை களப்பணியாளர்கள் தினசரி முகாம் இயக்க பதிவேடு-2021, ஊராட்சி ஒன்றியம் வேப்பந்தட்டை களப்பணியாளர்கள் வருகை பதிவேடு-2021 ஆகியவை வட்டார வளர்ச்சி அலுவலரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. மேலும்

திரு.ஆனந்தன் என்பவர் என் முன்பாக என் கேள்விக்கு பதிலாக எழுதி கொடுத்த கடிதம் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்கள் உதவி பொறியாளர் திரு.ஆனந்தன் அவர்களின் 29.10.2021-ஆம் தேதிக்கான அலுவல் குறித்து என்னிடம் எழுதிக் கொடுத்த கடிதம் ஆகியவை வழக்கு மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் சோதனை விபரங்கள் குறித்து தயார் செய்த செயல்முறையானது 29.10.2021-ந் தேதி 16.30 மணிக்கு ஆரம்பித்து 30.10.2021-ந் தேதி 00.45மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி முகாந்திரம் கூறாமல் பணம் வைத்திருந்த நபர்களான உதவி பொறியாளர் திரு.ஆனந்தன் மற்றும் இதர 5-நபர்களான மணிகண்டன், விஜயகுமார், பாலுசாமி, பொன்னுசாமி, பாக்கியலட்சுமி ஆகியோர் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அதற்காக 29.10.2021-ந் தேதி 16.30மணி முதல் 30.10.2021-ந் தேதி 00.45 மணிவரை தயார் செய்யப்பட்ட செயல்முறை, மேற்படி கைப்பற்றபட்ட மொத்த பணம் ரூ.52350/- மற்றும் ஆவணங்களை தங்களிடம் ஒப்படைக்கிறேன். இப்படிக்கு ஆங்கிலத்தில் ஒப்பம். K.P.ரவிக்குமார், cell Inspector 30/10/2021. இன்று 30.10.2021-ந் தேதி 13.30 மணிக்கு மேற்படி புகாரை பெற்று நிலைய குற்ற எண்.08/2021 u/s7,7A of the Prevention of Corruption Act-1988 (as amended in 2018) –ன் படி வழக்கு பதிவு செய்தேன். ஆங்கிலத்தில் ஒப்பம். R.Rathinavalli. காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, பெரம்பலூர். வாதியின் புகாரையும், முதல் தகவல் அறிக்கையின் அசலையும் இணைத்து கனம். தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, பெரம்பலூர் அவர்களுக்கு அனுப்பியும் நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை நிலைய கோப்பிலும் வைத்தேன்.

R. Rathinavalli.
30/10/2021.
INSPECTOR OF POLICE
Vigilance and Anti-Corruption
Perambalur